# கேள்வி அறிவித்தல்

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## மின்சக்தி அமைச்சு

## இலங்கை மின்சார சபை

### சர்வதேச போட்டிக்குறிய கேள்வி அறிவித்தல் (ICB)

நிர்மாணித்தல், வைத்திருத்தல், இயக்குதல் மற்றும் கைமாற்றுதல் அடிப்படையில் கெரவலபிட்டியவில் 300MW இரண்டாவது LNG இணைந்த சுற்று சக்திவலு உற்பத்தி வசதியினை அபிவிருத்தி செய்தல்

எமது இல.: CEB/AGM(TR)/DGM(PPD)/LNG2-2020
கேள்விகளை ஒப்படைப்பதற்கான இறுதி திகதி: 2021.09.13, 11.00 மணித்தியாலங்கள்

1. மின்சக்தி அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு சார்பாக இலங்கை மின்சார சபையானது பிரேரிக்கப்பட்டுள்ள 220kV கெரவலபிட்டிய உபமின்நிலையத்துடன் இணைக்கப்படவுள்ள நிர்மாணித்தல், வைத்திருத்தல், இயக்குதல் மற்றும் கைமாற்றுதல் (BOOT) அடிப்படையில் கெரவலபிட்டியவில் 300MW இரண்டாவது LNG இணைந்த சுற்று சக்திவலு உற்பத்தி வசதியினை அபிவிருத்தி செய்வதற்கு விருப்பமுள்ள மனுதாரர்களிடமிருந்து கேள்வி மனுக்களை கோருகின்றது.

2. வெற்றிகரமான செயற்றிட்ட முன்வைப்பாளர் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டும்:
   - இணைந்த சுற்று மின்னுற்பத்தி நிலையத்தினை வடிவமைத்தல், நிதி முதலீடு, பெறுகை, நிர்மாணித்தல், ஆரம்பித்தல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் 25 வருட இயக்குதல் நிறைவுக்கு பின்னர் கைமாற்றுதல்.
   - இமிச யினால் வழங்கப்பட்ட எல்லைகள் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணியினுள் செயற்றிட்டத்தை அபிவிருத்தி செய்தல்.
   - மின்மாற்றிகள், உற்பத்தி பகுதியிலிருந்து உபமின்னிலையம் வரையிலான பாதுகாப்பு மற்றும் மானிப்பொருத்துதல் போன்ற செலவுகள் உட்பட, பிரேரிக்கப்பட்டுள்ள 220kV கெரவலபிட்டிய உபமின்நிலையத்துடன் மின்னுற்பத்தி நிலையத்தினை இணைப்பதற்கான செலவினை ஏற்றுக்கொள்ளல்.
   - அனைத்து சூழல் அனுமதிகள், அரசாங்க அனுமதிகள் மற்றும் சட்டரீதியான அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளல்.
   - மேற்சொன்ன மின்னுற்பத்தி நிலையத்திற்காக இலங்கை மின்சார சபையுடன் மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கை ஒன்றினை மேற்கொள்ளல். மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையின் காலம் இணைந்த சுற்று மின்னிலையம் இயங்கத் தொடங்கிய திகதியிலிருந்து 25 வருடங்கள் ஆகும்.

3. ஆறு பதிப்புகளைக் கொண்ட RFP ஆவணத்தினை, ஆர்வமுள்ள மனுதாரர்கள் பிரதி பொது முகாமையாளர் (தனியார் சக்திவலு அபிவிருத்தி) அலுவலகத்திலிருந்து கீழே விடயம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திலிருந்து 9:00 மணி தொடக்கம் 15:00 மணிக்கிடையில் அலுவலக நாட்களில் கேள்விமனு கோரல் முடிவுத் திகதிக்கு முப்பது (30) நாட்களுக்கு முன் வரையில் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு 02, இலங்கை எனும் முகவரிக்கு எழுதப்பட்ட மீளச்செலுத்தப்படாத ரூபா 400,000.00 க்கான வங்கி வரைவு அல்லது பணத்தை கொடுத்து கொள்வனவு செய்யலாம்.

   RFP ஆவணத்தினை கூரியர் மூலமாக பெற்றுக்கொள்ள தேவையேற்படின், இலங்கை மின்சார சபை, கொழும்பு 02, இலங்கை எனும் முகவரிக்கு எழுதப்பட்ட மீளச்செலுத்தப்படாத ரூபா 400,000.00 க்கான (உள்ளூர் விநியோகத்திற்கு மட்டும்) வங்கி வரைவு உள்ளடங்கிய எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை ஆர்வமுள்ள மனுதாரர்கள் விடயம் 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். ஆவணங்கள் தொலைந்து போவதற்கும் தாமதமாக கிடைப்பதற்கும் பொறுப்பேற்கப்படாது.

வெளிநாடுகளில் உள்ள எந்தவொரு ஆர்வமுள்ள மனுதாரரும், RFP ஆவணத்தினை கூரியர் மூலமாக பெற்றுக்கொள்ள தேவையேற்படின்,இமிச இன் சர்வதேச கணக்கிற்கு மீளச்செலுத்தப்படாத 2,300.00 அமெரிக்க டாலருக்கான வங்கி வரைவு உள்ளடங்கிய விண்ணப்பம் ஒன்றை DGM(PPD) க்கு dgmppd.tr@ceb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். இமிச யின் கணக்கிற்கு பணம் கிடைத்தது உறுதிசெய்யப்பட்டவுடன் RFP ஆவணமானது கூரியர் ஊடாக அனுப்பிவைக்கப்படும். ஆவணங்கள் தொலைந்து போவதற்கும் தாமதமாக கிடைப்பதற்கும் பொறுப்பேற்கப்படாது.

- பெறுநர்: பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை
- விலாசம்: 50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை
- கணக்கு இல.: 204100130085135
- SWIFT Code: PSBKLKLX023
- வங்கியின் பெயர்: மக்கள் வங்கி, தலைமையக கிளை
- வங்கியின் விலாசம்: 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை
- எனது இல: CEB/AGM(TR)/DGM(PPD)/LNG2-2020

4. RFP ஆவணங்கள் CEB இணையத்தளத்தில் ஆய்விற்காக காணப்படுகின்றது; http://www.ceb.lk

5. மேலதிக விபரங்களுக்காகவும் RFP ஆவணங்களை பரீட்சித்துப்பார்க்கவும், அல்லது RFP ஆவணத்தை கொள்வனவு செய்யவும், ஆர்வமுள்ள செயற்றிட்ட முன்வைப்பாளர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்;

   பிரதி பொது முகாமையாளர்
   தனியார் சக்திவலு அபிவிருத்தி கிளை
   இலங்கை மின்சார சபை,
   2ம் மாடி, கட்டிடம்,
   சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை.
   தொ.பே./தொ.ந: +94 11 2338249
   மின்னஞ்சல்: dgmppd.tr@ceb.lk

6. RFPக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கீழுள்ள விலாசத்திற்கு ஒப்படைக்கப்படலாம்;

   தலைவர், CANC, மின்சக்தி அமைச்சு
   C/O, மேலதிக பொது முகாமையாளர் (மின்கடத்தல்)
   இலங்கை மின்சார சபை,
   இல.50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை.

   கேள்விப் பத்திரங்களை RFPஇன் பதிப்பு I இல் உள்ள சரத்து 3.20 க்கு ஏற்ப 2021.09.13 (கேள்விமனு கோரல் முடிவு) அன்று அல்லது அதற்கு முன்னதாக 11:00 மணிக்கு முன்னதாக (கேள்வி கோரல் முடிவு) அனுப்பிவைக்கவும். மேலே குறிப்பிடப்பட்ட கேள்வி மனு கோரல் முடிவுத்திகதிக்கு பின்னர் வரும் கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. கேள்வி மனுக்கள் கேள்வி மனு கோரலுக்கான இறுதி திகதி முடிவடைந்தவுடன் உடனடியாக மேலதிக பொது முகாமையாளர் (மின்கடத்தல்) அலுவலகத்தில் மனுதாரர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

பொது முகாமையாளர்
**இலங்கை மின்சார சபை**
தலைவருக்காக,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD